# சிலாங்கூர் - கோலாலம்பூர் எல்லைப் பிரச்சினைக்கு 2025ஆம் ஆண்டில் தீர்வு

## சிலாங்கூர் மந்திரி பெசார் தகவல்

ஷா ஆலம், பிப். 7-

சிலாங்கூர் - கோலாலம்பூருக்கான எல்லைப் பிரச்சினைக்கு வரும் 2025ஆம் ஆண்டில் தீர்வு காணப்படும் என சிலாங்கூர் மாநில மந்திரி பெசார் டத்தோஸ்ரீ அமிருடின் ஷாரி கூறினார்.

இந்த எல்லைப் பிரச்சினைக்குத் தீர்வு காண்பது மிகவும் அவசியம். காரணம் இது வரி, ஊராட்சி மன்றங்களின் அமலாக்கப் பிரிவு, இரண்டு மாநிலங்களுக்கான அடிப்படை வசதி பராமரிப்பு ஆகியவற்றை உள்ளடங்கும் என்றார்.

எனினும், தெளிவான முறையில் எல்லையை நிர்ணயிப்பதில் கொஞ்சம் சிக்கல் உள்ளது. காரணம் இதற்கு முன்பு பகாங், நெகிரி செம்பிலான் மாநில அரசாங்கங்களுடன் சிலாங்கூர் மாநில அரசாங்கம் கையெழுத்திட்டுள்ளதுபோல் அது கட்டடங்கள், வனப்பகுதி, விவசாயப் பகுதிகளையும் உள்ளடங்கியிருக்கும் என்றார்.

தற்போது சிலாங்கூர் மாநிலம் கோலாலம்பூர் - சிலாங்கூர் மாநிலத்தை உள்ளடங்கியுள்ளது. உதாரணத்திற்கு செராஸ் எங்கு உள்ளது, அது கோலாலம்பூரில் உள்ளதா அல்லது சிலாங்கூரின் காஜாங்கில் உள்ளதா எனவும் சிலர் கேள்வி எழுப்பி வருகின்றனர் என்றார்.

எனவே, இப்பிரச்சினைக்குத் தீர்வு காண இவ்விரு மாநிலங்களுக் கிடையே சீரான முறையில் எல்லைகள் வகுக்கப்பட வேண்டும் என்றார்.

இந்த எல்லை மறுசீரமைப்பு விவகாரத்தில் 19 இடங்கள் இடம் பெற்றுள்ளன. அவற்றில் கோம்பாக், அம்பாங், உலுலங்காட் ஆகியவை உட்பட மேலும் இரண்டு, மூன்று இடங்களும் அடங்கும் என்றார்.

நேற்று முன்தினம் சிலாங்கூர் மாநில அரசாங்க அலுவலகத்தில் நடைபெற்ற செய்தியாளர் கூட்டத்தில் அவர் இவ்வாறு தெரிவித்தார்.

முன்னதாக சிலாங்கூர் - கோலாலம்பூர் எல்லைப் பிரச்சினை குறித்து அவர் கூட்டரசுப் பிரதேச



அமைச்சர் டாக்டர் ஸலிஹா முஸ்தாபாவுடன் பேச்சுவார்த்தை நடத்தினார்.

இதற்கு முன்பு கோலாலம்பூரையும் புத்ரா ஜெயாவையும் மத்திய அரசாங்கத்திடம் ஒப்படைப்பது மீதான ஒப்பந்தம் உட்பட வேறு சில ஒப்பந்த முறைகளும் இதில் வழிகாட்டியாக மேற்கொள்ளப்படும் எனவும் அவர் தெரிவித்தார்.

இதற்கு முன்பு சரியான முறையில் அளவிடப்படவில்லை. ஆனால், இப்போது அதனை சரியான முறையில் அளவிட வேண்டியுள்ளது.

எல்லை விவகாரம் குறித்து இதற்கு முன்பு நாங்கள் இரண்டு புரிந்துணர்வு உடன்பாட்டு ஒப்பந்தங்களில் கையெழுத்திட்டுள்ளோம். இவ்விவகாரம் மாநில அரசாங்கக் கூட்டத்திற்கு கொண்டு செல்லப்பட்டு பின்னர் சிலாங்கூர் மாநில சுல்தானின் கவனத்திற்கும் கொண்டு செல்லப்படும் என்றார்.